சாட்சி அரசு தரப்பு சார்ந்து சாட்சியம் அளிக்காததால் பகுதி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

கடந்த 19.03.2015 ம் தேதி போலிசார் வரைபடம் வரைந்த சமயத்தில் தீயில் எரிந்த நிலையில் இருந்த தென்னை மர ஓலை மற்றும பாதி எரிந்த நிலையில் இருந்த ஓலைகளை எங்கள் முன்னிலையில் கைப்பற்றி மகசர் தயார் செய்தார்கள் என்றும் அதற்கு ஆதரவாக சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும், போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்சமயம் விவரங்கள் தெரியாது என்று ஆஜர் எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**1** ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

2 கையெழுத்து போட்டுள்ள நிலையில அதிலுள்ள விவரம் தெரியாது என்றால் சரிதான். அசா.1 அருண கிரியை எப்படி தெரியும் என்றால் தெரிந்த நபர் பக்கத்தில் உள்ளவர்கள் சொன்னார்கள். எங்கு வேலை செய்து வருகிறிர்கள் என்றால் செங்கல் சூலையில். வேலை செய்யும் செங்கல் சூலை சம்பவ இடத்திற்கு பக்கத்தில் உள்ளது என்றால் சரிதான், வேலை முடித்து விட்டு வந்தேன். பார்வை மகசரிலும் கைப்பற்றுதல் மகசரிலும் கையொப்பம் மாறுபாடாக உள்ளதாலும் அசா.1 உங்களுக்கு தெரிந்து நபர் என்பதாலும் போலிசார் கேட்டு கொண்டதற்கு இணங்க காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்து விட்டு தற்போது சம்பவ இடத்தில் வைத்து போட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றால் சரியல்ல. வழக்கில் வழக்கு சொத்து கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல.

2 ம் எதிரி தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை தழுவிக் கொள்வதாக தெரிவித்தார்.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 58/2019 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W. |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சாமியப்பன் | தொழில் | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : அருணாசல கவுண்டர் | ஜாதி | |
| கிராமம் | : | இனம் | |
| தாலூக்கா | : | வயது | |
| Mail ID | : | Mobile No. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 22.10.2025

முதல் விசாரணை

நான் எலையமுத்துர் அருகில் வேல் நகர் தோட்டத்தில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 18.09.2018 ம் தேதி மாலை 6.00 மணி வாக்கில் நான் எலையமுத்துாருக்கு செல்வதற்காக சென்ற போது தன்னாசியப்பன் கோவில் அருகில் சத்தம் கேட்டு நான் சென்று பார்த்த போது முருகானந்தம் கீழே விழுந்து கிடந்தார். சபரிநாதன், கார்த்திக் குமார் கருப்பண்ண வாத்தியார் மூவரும் சேரந்து முருகானந்தம்என்பவரை காலால் உதைத்து கொண்டிருந்தார்கள். முருகானந்ததின் மனைவி கல்யாணி பக்கத்தில் உட்கார்ந்து அழுது கொண்டிருந்தார். தனசேகர் என்பவர் இரும்பு சென்டிரிங் கம்பியை எடுத்து வந்து முருகானந்தம் என்பவரை கொல்லாமல் விட மாட்டேன் என்று தலையில் அடித்தார். முருகானந்தம் இரும்பு கம்பியை இடது கையால் தடுத்த போது அவரது சுண்டு விரலில் காயம் ஏற்பட்டது. இரும்பு கம்பியால் தனசேகரன் முகத்தில் குத்திய போது மூக்கின் அருகில் இரத்த காயம் ஏற்பட்டது. முருகானத்தின் மகன் ஜீவிதா மற்றும் அவரது அப்பா இருவரும் வடக்கிலிருந்து அந்த இடத்திற்கு வந்து கொண்டிருந்தார்கள் நான் சண்டை செய்யாதிர்கள் என்று தடுத்து வாத்தியாரை அந்த பக்கம்

போக சொன்னேன். முருகானந்த்தை அவரது மனைவி மருத்துவமனைக்குஅழைத்து சென்றார்கள். தனசேகரன் அப்போது என்னைகிருந்தாலும் என் கையால தான்டா சாவு என்று பசாரித்து விட்டு சென்றார். போலிசார் மறுநாள் 19 ம் தேதி என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1. போலிசார் எங்கு வைத்து எத்தனை மணிக்கு விசாரித்தார்கள என்றால் தன்னாசியப்பன் கோவில் அருகில் அடுத்த நாள் 6.00 மணி வாக்கில் விசாரித்தார்கள். உங்களுக்கு சுற்று வட்டார பகுதியில் சுமார் 100 ஏக்கர் உள்ளது என்றால் இல்லை 30 ஏக்கர் உள்ளது. எல்லா பக்கமும் சேர்ந்து 30 ஏக்கர் உள்ளது. தோட்டத்தில் மாடு கறக்கும் பணி உள்ளது என்றால் மாடு இல்லை. சுற்று வட்டாரத்தில் 18 ஏக்கர் உள்ளது சுமார் 20 ஏக்கர் உள்ளது. 20 ஏக்கர் உள்ளது ஆனால் மாடு இல்லை என்றால் ஆமாம். காலை மாலை முருகானந்தம் வீட்டிற்கு சென்று பால் வாங்கி வருவிர்கள் என்றால் ஆமாம். பால் வாங்கும் போது சம்பவத்தை பார்த்திர்கள் என்றால் இல்லை எலையமுத்துார் போகும் போது சம்பவத்தை பார்த்தேன். எலையமுத்துார் சென்று விட்டு திரும்பி வரும் போது பால் வாங்கி வந்தேனா என்றால் இல்லை. சம்பவத்தை அந்த வழியாக போன போது பார்த்திர்க்ளா என்றால் பால் வாங்க போன போது பார்த்தேன். தன்னாசி யப்பன் கோவில் தென் வடல் ரோடு என்றாலும் அந்த வழியாக போனால் 4 பேர் தோட்டத்திற்கு செல்ல இயலும் என்றாலும் வேறு தோட்டத்திற்கு செல்ல இயலாது என்றாலும் சரிதான். முருகானந்தம் உடன் வந்துள்ளார் என்றால வந்துள்ளார். முருகானந்தம் உங்களிடம் வரவு செலவு வைத்துள்ளார் என்றால் இல்லை. வழக்கிற்காக பொய்யாக சொல்கிறிர்கள் என்றாலும் அவர் உங்களிடம் வரவு செலவு வைத்துள்ளார் என்றாலும் முருகானந்தம் வேண்டி கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் சொல்கிறிர்கள் என்றாலும் சரியல்ல.
2. சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் சம்பவத்தை இடத்தை ஒட்டி கருப்பண்ணன் வாத்தியாருக்கு பூமி இல்லை என்றால் சரிதான், அவர் சம்மந்திக்கு பூமி உள்ளது. முருகானந்தம் பூமி கிழுபுறமாக உங்கள் பூமி உள்ளது என்றால் ஆமாம், எனக்கும் என் தம்பிக்கும் மொத்தம் 20 ஏக்கர் பூமி உள்ளது எனது பூமியை ஒட்டி முருகானந்தம் பூமி உள்ளது. முருகானந்தம் பூமியை ஒட்டி கருப்பண்ண வாத்தியார் உள்ளது என்றால் உள்ளது . க.ச என்

என்ன என்றால் தெரியாது. சுற்று வட்டார பகுதியில் கருப்பண்ண வாத்தியாருக்கு பூமி இல்லை என்றால் உள்ளது. அவர் அப்பா மற்றும் மனைவி மற்றும மகன் பெயரில் உள்ளதா என்று தெரியாது , அவர் ஓட்டி வருகிறார்

3. இதே நீதிமன்றத்திலும் மற்ற நீதிமன்றத்திலும் நிறைய வழக்குகள் உள்ளது என்றால் ஆமாம். முருகானந்தம் கீழே விழுவதற்கு முன் என்ன நடந்தது என்று தெரியாது என்றால் சரிதான். முருகானந்தம் என்பவரின் தம்பி குணசேகரனை தெரியுமா என்றாடல தெரியாது. முருகானந்தம் என்பவரின் தம்பி குணசேகர் அவர் அண்ணன் மீது சொத்து பாக பிரிவினை வழக்கு போட்டுள்ளார் என்றால் இன்ஜக்சன் வழக்கு போட்டுள்ளார். அந்த வழக்கில் 3 ம் தரப்பினர் உள்ளே அத்துமீறி நுழைந்து தாக்கி அதனால் ஏற்பட்ட காயத்திற்காக மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தார் என்பது தெரியும் என்றால் தெரியாது. சம்பவம் நடந்த போது அங்கு நீங்கள் இல்லை என்றாலும் நீங்கள் காளியாபுரத்து தோட்டத்தில் இருந்திர்கள் என்றாலும் சரியல்ல. சம்பவத்தின் போது வேறு வழக்கில் நீங்கள் தலைமறைவாக இருந்திர்கள் என்றால் இல்லை.
4. அடிப்பட்ட நபரை எந்த வாகனத்தில் யார் அழைத்து சென்றார்கள் என்ற விவரம் தெரியாது என்றால் சரியல்ல ஜீவிதா மற்றும் மனைவி அழைத்து சென்றார் எந்த வாகனம் என்று தெரியாது. சம்பவ இடத்தில் இல்லாததால் தான் எந்த வாகனம் என்று தெரியவில்லை என்றால் இல்லை. முதல் விசாரணையில் சொன்ன விவரங்கள் அனைத்தும் அசா.1 மற்றும் போலிசார் கேட்டு கொண்டதற்கு இணங்க சொன்னிர்கள் என்றால் சரியல்ல. போலிசார் உங்களிடம் வாக்குமூலம் வாங்கவில்லை என்றால் சரியல்ல.
5. சம்பவ இடத்தில் இரத்த கறை மற்றும் பால் கொட்டியதற்கான தாரை இருந்ததா என்றால் அதை நான் பார்க்கவில்லை. அசா.1 கேட்டு கொண்டதற்கு இணங்க சம்பவத்தை பார்த்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றால் சரியல்ல. நீதிமன்றம் மற்றும காவல் நிலையம் உங்களுக்கு பரிச்சயம் என்பதால் தான் உங்களை வைத்து வழக்கு போட்டுளளார் என்றால் சரியல்ல. அசா.1 க்கும் எதிரிகளுக்கும் ஏற்கனவே இருந்த முன் விரோதத்தின் காரணமாக கொடுத்த பொய் புகாரின் அடிப்படையில் பொய்யாக சாட்சியம் சொல்கிறிர்கள் என்றால சரியல்ல.

<u>அரசு தரப்பில் மறு விசாரணை</u>

ஆஜர் எதிரிகள் ஏதாவது புகார் கொடுத்து வழக்கு நிலுவையில் உள்ளதா என்றால் இல்லை, அவர்கள் புகார் கொடுக்கவில்லை.

**குறுக்கு மறுவிசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.